


## பாமாலை 219 மெய் அன்பரே உம் மா அன்பை

1 மெய் அன்பரே உம் மா அன்பை
உய்த்தெம்மைச் சொந்தமாக்கினீர்;
பூலோக பாக்கியத்தால் எம்மை
மேலாக சிந்தையாக்குவீர்

2 உம் ஆவியால் எம் உள்ளத்தில்
உந்தன் மா நோக்கம் காட்டுவீர்;
உம் நோக்கம் பூர்த்தியாகிட
எம் நெஞ்சில் அன்பும் நாட்டினீர்

3 மெய் அன்பால் அன்பர் ஸ்வாமியில்
எய்துவர் உன்னத நிலை;
பேரின்பப் பேறு ஆன்மாவில்
பாரினில் மேலாம் வாழ்க்கையை

4 தம் உள்ளம் ஒன்றை இணைக்கும்
தம்பதிகள் இவருக்கே
நித்தம் புத்தன்பு இன்பமும்
சித்தமே வைத்து ஈயுமே

5 நற்குணம் யாவும் இவரில்
நன்கே அமைந்து தீமையை
அகற்றி பெற நெஞ்சத்தில்
அழகு வன்மை தூய்மையை

6 ஏகமாய் ஜீவ பாதையில்
சுகமாய் வாழ உம்மிலே;
தம் அன்பை ஊன்றி வாழ்க்கையில்
எத்துன்பம் கஷ்டம் மேற்கொண்டே.